# தொல்காப்பியம் பொருளதிகாரம்

## முதல் ஐந்து இயல்கள் நூற்பாக்கள்

### 1. அகத்திணை இயல்

947 கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதினை என்ப.

948 அவற்றுள்
நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.

949 முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறைசிறந்தனவே
பாடலுள் பயின்றவை நாடும் காலை.

950 முதல் எனப்படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பு எனமொழிப இயல்பு உணர்ந்தோரே.

951 மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.

952 காரும் மாலையும் முல்லை; குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்.

953 பனிஎதிர் பருவமும் உரித்தெனமொழிப.

954 வைகறை விடியல் மருதம்; எற்பாடு
நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்.

955 நடுவு நிலைத் திணையே நன்பகல் வேனிலொடு
முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே.

956 பின்பனி தானும் உரித்னெ மொழிப.

957 இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும்
உரியதாகும் என்மனார் புலவர்.

958 திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே
நிலன் ஒருங்கு மயங்குதல் இன்றென மொழிப
புலன் நன்குணர்ந்த புலமையோரே.

959 உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.

960 புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்

Scanned by TapScanner

ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலை திணைக்குரிப்பொருளே.
961 கொண்டுதலைக் கழிதலும், பிரிந்து அவண் இரங்கலும்
உண்டெனா மொழிப ஓரிடத் தான.
962 கலந்த பொழுது காட்சியும் அன்ன.
963 முதல் எனப்படுவது ஆ இருவகைத்தே.
964 தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை,
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருஎன மொழிப.
965 எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்.
966 பெயரும்வினையும் என்று ஆ இருவகைய;
திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே.
967 ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்
ஆவயின் வருஉம் கிழவரும் உளரே.
968 ஏனோர் பாங்கினும் எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே.
969 அடியோர் பாங்கினும், வினைவலர் பாங்கினும்
கடிவரை இல புறத்து என்மனார் புலவர்.
970 ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்.
971 ஓதல், பகையே, தூது இவை பிரிவே.
972 அவற்றுள்
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன.
973 தானேசேறலும் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே.
974 மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய,
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே.
975 மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்து.
976 மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப.
977 உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான.
978 வேந்துவினை இயற்கை வேந்தன் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்துஇடன் உடைத்தே.

Scanned by TapScanner

979 பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே
உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான.
980 முந்நீர் வழக்கம் மகடுஉவோடு இல்லை.
981 எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான.
982 தன்னும் அவனும் அவளும் சுட்டி,
மன்னு நிமித்தம், மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தல் என்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய.
983 ஏமப்பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே.
984 அயலோராயினும் அகற்சி மேற்றே.
985 தலைவரும் விழும நிலை எடுத்துரைப்பினும்,
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்,
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்,
வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்,
நோய்மிகப் பெருகித் தன்நெஞ்சு கலுழ்ந்தோளை
அழிந்தது களைஇய ஒழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு
என்றிவை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன.
986 பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்,
ஊரது சார்வும் செல்லும் தேயமும்
ஆர்வநெஞ்சமொடு செப்பிய வழியினும்,
புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விடுவிப்பினும், ஆங்குஅத்
தாய்நிலைகண்டு தடுப்பினும், விடுப்பினும்
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப.
987 ஒன்றாத் தமரினும், பருவத்தும், சுரத்தும்

ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்த்தலில் கலங்கு அஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உள்பட
அப்பாற் பட்ட ஒரு திறத்தானும்,
நாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண்பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதிய ஒருதிறத்தானும்
புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்
தூது இடையிட்ட வகையினானும்
ஆகித்தோன்றும் பாங்கோர் பாங்கினும்
மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்
காவற்பாங்கின் ஆங்கோர் பக்கமும்
பரத்தையின் அகற்சியின் பரிந்தோள் குறுகி
இரத்தலும் தெளித்தலும் என இருவகையொடு
உரைத்திற நாட்டம் கிழவோன் மேன.

988 எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே.

989 நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்.

990 நிகழ்ந்தது கூறிநிலையலும் திணையே.

991 மரபுநிலை திரியா மாட்சியஆகி
விரவும் பொருளும் விரவும் என்ப.

992 உள்ளுறை உவமம் ஏனை உவமம்எனத்
தள்ளாதாகும் திணைஉணர் வகையே.

993 உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்
கொள்ளும் என்ப குறியறிந்தோரே.

994 உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகஎன
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்.

995 ஏனை உவமம் தான்உணர் வகைத்தே.

996 காமஞ்சாலா இளமையோள்வயின்

ஏமம் சாலா இடும்பைஎய்தி
நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.
997 ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.
998 முன்னைய நான்கும் முன்னதற்கென்ப.
999 நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரியதாகும் என்மனார் புலவர்.
1000 மக்கள் நுதலிய அகன்ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்.
1001 புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.

Scanned by TapScanner